27.03.2025 S.C.No.138 of 2017 P.W.17 – முத்துக்குமரன்

(A6 absent. And his absence condoned u/s 317 of Cr.P.C. petition filed and allowed. A1 to A5 present)

விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.20 P.M.

அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட Crl.M.P.No.835/2025 உத்தரவு நாள் 10.03.2025 அடிப்படையில் இந்த சாட்சியை விடுபட்ட சில ஆவணங்களை குறியீடு செய்வதற்காக மீண்டும் வரவழைக்கப்பட்டு அவர் மூலம் ஆவணங்களை கீழ்க்கண்டவாறு அரசு தரப்பில் குறியிடப்படுகிறது.

அ.த.சா.ஆ.40 குடியிருப்பு சோதனை ஜாபிதாவில் நானும் மற்றொரு நபரான வருவாய் ஆய்வாளர் கிருஷ்னனும், கிராம நிர்வாக அலுவலர் விஜய்–யும் சாட்சி கையொப்பம் போட்டோம். அந்த சோதனை ஜாபிதாவில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. என்னுடைய கையொப்பம் அ.த.சா.ஆ.76. அந்த சோதனையை டிஎஸ்பி 06.07.2015 ல் நடத்தினார். அ.த.சா.ஆ.41 குடியிருப்பில் சோதனை செய்ததின் அடிப்படையில் அங்கிருந்த 10 ஆவணங்களை மேற்படி டிஎஸ்பி, நான், வருவாய் ஆய்வாளர் கிருஷ்ணன் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் விஜய் முன்னிலையில் கைப்பற்றினார். அந்த மகசரில் நான் மூன்றாவதாக கையெழுத்து போட்டுள்ளேன். மேற்படி மகசரில் உள்ள என்னுடைய கையொப்பம் அ.த.சா.ஆ.77.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

Crl.M.P.Nos. 836 to 838 of 2025, dated 07.03.2025 மனுக்கள் அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1 முதல் 6 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

கே: தங்களுக்கு காவல் துறையில் எத்தனை ஆண்டுகள் அனுபவம் உள்ளது ?

ப: 28 வருடங்கள் அனுபவம் பெற்றுள்ளேன்.

கே: தாங்கள்தான் 16.06.2015, 17.06.2015, 18.06.2015 மற்றும் 19.06.2015 ஆகிய தேதிகளில் பள்ளிக்கொண்டா காவல் நிலைய எழுத்தர் என்றால்?

ப: சரிதான்.

கே: உங்களுடைய எழுத்தர் பணி என்ன என்றால் ?

ப: காவல் நிலைய பதிவேடுகளை பராமரிப்பதும், மேல் அதிகாரிகளிடமிருந்து வரும் கடிதங்களுக்கும் மற்றும் தகவல்களுக்கும் பதில் சொல்ல வேண்டிய பணி ஆகும்.

கே: ஆவணங்கள் பராமரிப்பதில் பொதுநாட்குறிப்பும் அடங்கியதுதான் என்றால் ?

ப: சரிதான். ஆனால் பொதுநாட்குறிப்பேட்டை வேறு ஒரு காவலர் அதை எழுதுவார்.

கே: அப்படி என்றால் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்யப்படும் தகவல்களுக்கு செய்யப்படாமல் தவிர்க்கப்பட்ட தகவல்களுக்கும் ஜிடி எழுதியவர்தான் பொறுப்பு என்றால்?

ப: சரிதான்.

கே: தாங்கள் ஒவ்வொரு நாளும் இறுதியில் ஜிடியில் என்ன எழுதியிருக்கிறது என்பது குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்து ஜிடி எழுதுகிற காவலரை கேட்டு தகவல்களை பதிவு செய்ய சொல்வதுண்டா ?

ப: ஜிடி எழுதுங்கள் என்று சொல்லத்தான் முடியும். அதை எழுதுவதும் எழுதாமல் இருப்பதும் ஜிடி எழுதுகிற காவலரினுடைய பொறுப்பு ஆகும்.

கே: பொதுவாக நிலையத்தில் உள்ள ஆவணங்களை பராமரிக்கும்போது அது குறித்து பெறுகிற தகவல்களை மேல் அதிகாரிகளான டிஎஸ்பிக்கு சொல்வது வழக்கம் உண்டா ?

ப: உண்டு. டிஎஸ்பிக்கு சொல்வோம். நாங்கள் ஆய்வாளருக்கு மட்டுமே தகவல் சொல்வோம்.

கே: உங்களுக்கு தனியாக டைரி உள்ளதா ?

ப: உண்டு. எழுதுவோம்.

கே: 16.06.2015, 17.06.2015, 18.06.2015 மற்றும் 19.06.2015 தேதிகளில் இரவு பாரா பணியில் இருந்தீர்களா ?

ப: இரவு பாராவில் இல்லை.

கே: அப்படியானால் பகல் பாரா பணியில் இருந்தீர்களா ?

ப: இருந்தேன்.

கே: உங்களுடைய பாரா பணி கால அளவு என்ன ?

ப: காலை 08.00 மணி முதல் இரவு 08.00 மணிவரை.

கே: 15.06.2015 மற்றும் 16.06.2015 ஆகிய தேதிகளில் வழக்கின் எதிரிகள் ஷமீல் பாஷாவை நிலையம் அழைத்து வந்ததாக ஏதேனும் தகவல் பதிவு செய்யப்பட்டுள்ளதா ?

ப: ஷமீல் பாஷாவை அழைத்து வந்ததாக பதிவுகள் ஏதும் இல்லை.

கே: 27.06.2015 அன்று காவல் ஆய்வாளர் கோவிந்தசாமியிடம் HC அனுமந்தன் அவர்கள் அளித்த வாக்குமூலத்தில் "16.06.2015 தேதியும்

19.06.2015 தேதியும் திரு. ரவி, சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்கள் கைப்பட எழுதி அனுப்பி வைத்தார்" என்று இருக்கிறதா என்றால் ?

ப: இருக்கிறது.

கே: 1ம் எதிரி மார்டின் பிரேம்ராஜ் 16.06.2015 முதல் 18.06.2015 வரை செம்மர கடத்தல் தொடர்பான வழக்கில் சிறப்பு பணியில் இருந்தார் என்றால் ?

ப: ஆமாம். இருந்தார்.

கே: 2 முதல் 6 வரையிலான வழக்கு எதிரிகள் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு உட்பட்டவர்கள் அல்ல என்றால் ?

ப: சரிதான்.

கே: வழக்கு எதிரிகள் 16.06.2015 முதல் 19.06.2015 வரை சிறப்புப்பணி தனிப்படை Special team–ல் பணியில் இருந்ததால் பள்ளிக்கொண்டா காவல் நிலைய வழக்குகளை விசாரிக்கவில்லை என்றால் ?

ப: சரிதான்.

கே: 16.06.2015 முதல் 19.06.2015 வரை ஷமீல் பாஷா பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு வந்ததாகவோ ரவி எஸ்எஸ்ஐ விசாரித்ததாகவோ அல்லது வேறு அதிகாரிகள் ஷமீல் பாஷாவை விசாரித்ததாகவோ பதிவுகள் ஏதும் உள்ளதா என்று வினவி அந்த காவல் நிலையத்தின் அந்த தேதிய பொதுநாட்குறிப்பேட்டை சாட்சியிடம் கொடுத்து பதில் சொல்லும்படி கேட்கப்பட்டது ?

ப: சாட்சி அதை பார்த்து அதில் எந்த ஒரு பதிவும் இல்லை என்கிறார்.

கே: ஷமீல் பாஷாவை எஸ்எஸ்ஐ ரவி Bindover செய்து அனுப்பியதற்கான ஆவணமான எ.த.சா.ஆ.10 ல் " இன்று 19.06.2015ம் தேதி விசாரணைக்கு வந்த நான் விசாரணையை மேற்படி பவித்ராவை கூட்டிப்போய் வீடு வாடகைக்கு எடுத்து தங்கவைத்து அவரை தனியாக அனுப்பியது தவறுதான்" என்று இருக்கிறது என்றால் ?

ப: இருக்கிறது.

கே: கௌஷ் பாஷாவாகிய ஷமீல் பாஷாவின் மாமனார் ஷமீல் பாஷாவை பத்திரமாக அழைத்துச்சென்றதற்கான ஆவணமாக அ.த.சா.ஆ.3 மற்றும் 4ல் ஒரு எ.த.சா.ஆ.11 ஆக "19.06.2015ம் தேதி பகல் 13.00 மணிக்கு பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் இருந்து நல்ல முறையில் அழைத்துச்செல்கிறேன்" என்று இருக்கிறதா என்றால் ?

ப: இருக்கிறது.

கே: தங்களது கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் முதல் பக்கத்தில் கீழிருந்து 10 வரிக்கு மேல் "நான் அவரிடம் யார் என கேட்டபோது பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 140/2015 வழக்கில் காணாமல் போன குச்சிப்பாளையத்தை சேர்ந்த பவித்ரா வழக்கில் சந்தேகத்தின் பேரில் உறவினர்களால் சந்தேகத்தின் பெயரில் ஒப்படைக்கப்பட்ட நபர் என்றும் அவர் பெயர் ஷமீல் பாஷா என்றும் சொன்னார்" என்று இருக்கிறதா என்றால் ?

ப: இருக்கிறது. எஸ்எஸ்ஐ ரவியிடம் கேட்டபோது அவர் அவ்வாறு சொன்னார்.

கே: உங்களுடைய பாக்கேட் நோட்புக்–ல் ஷமீல் பாஷா குறித்து ஏதேனும் குறிப்புகள் எழுதியிருக்கிறீர்களா ?

ப: நினைவில்லை. 10 ஆண்டுகளுக்கு முன் நடந்தது. அதனால் நினைவில்லை.

கே: 19.06.2015 அன்று மாலை 04.30 மணிக்கு மேல் ஆம்பூர் அரசு மருத்துவமனையிலிருந்து ஏதேனும் குறிப்பாக ஷமீல் பாஷா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக தகவல் வந்ததா ?

ப: கேள்விப்பட்டேன். தகவல் வந்ததா என்று நினைவில்லை.

கே: ஆம்பூர் அரசு மருத்துவமனையில் 19.06.2015 மாலை 04.30 மணிக்கு ஷமீல் பாஷா உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டது குறித்து பொதுநாட்குறிப்பில் ஏதேனும் தகவல் பதிவு செய்யப்பட்டுள்ளதா ?

ப: பதிவுகள் எதுவுமில்லை.

கே: 19.06.2015 அன்று மதியம் 01.00 மணிக்கு மேல் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் மருத்துவமனை தகவல் பொறுப்பிற்காக எவரேனும் நியமிக்கப்பட்டார்களா ?

ப: அவ்வாறு யாரும் நியமிக்கப்படவில்லை.

கே: 19.06.2015 ஷமீல் பாஷா ஆம்பூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக தாங்கள் பெற்ற தகவலை அன்றைய தேதியில் ஜிடி பொறுப்பில் இருந்த எஸ்எஸ்ஐ ரவியிடம் கூறினீர்களா ?

ப: அதைப்பற்றி எனக்கு நினைவில்லை.

கே: 19.06.2015 முதல் 26.06.2015 வரை ஷமீல் பாஷாவினுடைய மருத்துவ சிகிச்சைகள் குறிப்பாக ஆம்பூர் அரசு மருத்துவமனையில் பெற்றது குறித்து தகவல்கள் யாரேனும் சொன்னார்களா ?

ப: கேள்விப்பட்டேன். குறிப்பாக சொல்ல முடியவில்லை.

கே: 26.06.2015 அன்று ஷமீல் பாஷா இறந்ததாக யார் தகவல் சொன்னது ?

ப: சென்னை மருத்துவமனயைிலிருந்து காவல் நிலைய தொலைப்பேசியில் அழைப்பு வந்தது. அதில் ஷமீல் பாஷா இறந்ததாக கூறிவிட்டு அழைப்பை துண்டித்துவிட்டார்கள். 26.06.2015 மாலை 05.00 மணிக்கு பிறகு 10 நிமிடத்திற்கு முன்பாக பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு ஷமீல் பாஷாவை குறித்து தகவல் சொன்னதாகவும், அந்த தகவல் சொன்ன பிறகு மேற்சொன்ன ஷமீல் பாஷா இறந்துவிட்டதாகவும் கூறிவிட்டு இணைப்பை துண்டித்துவிட்டார்கள். அதனால் அந்த நபர் யார் என்று கேட்பதற்கு முன் துண்டித்துவிட்டதால் யார் என்று தெரியாது.

கே: 26.06.2015 இரவு பாரா பணி யார் என்றால் ?

ப: தலைமைக்காவலர் 257 அனுமந்தன் பணியில் இருந்ததாக பாரா புத்தகத்தில் உள்ளது. அவரது பணி காலம் என்பது 26.06.2015 இரவு

08.00 மணிமுதல் மறுநாள் காலை 08.00 மணி வரை ஆகும்.

கே: அ.த.சா.ஆ.21 ஜிடியில் 26.06.2015 மாலை 05.00 மணிக்கு மேல் மறுநாள் காலை 08.00 மணி வரையில் ஷமீல் பாஷா இறந்தது குறித்து தலைமைக்காவலர் அனுமந்தனோ அல்லது ஜிடி பொறுப்பில் இருந்த எஸ்எஸ்ஐ கலைச்செல்வனோ பதிவுகள் ஏதும் செய்துள்ளார்களா ?

ப: இல்லை.

கே: 27.06.2015 பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் ஷமீல் பாஷா இறந்தது குறித்து எவரேனும் புகார் அளித்தார்களா ?

ப: பகலில் யாரும் புகார் அளிக்கவில்லை. புகார் அளித்ததாக நினைவுமில்லை.

கே: 27.06.2015 மாலை தங்களது பணி முடிந்த பிறகு இரவு பாரா யார் இருந்தார்கள் என்றால் ?

ப: தலைமைக் காவலர் பரத் இருந்தார்.

கே: 27.06.2015 இரவு 12.00 மணிக்கு விஷேசம் ஏதும் இல்லை என பொதுநாட்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ?

ப: சரிதான்.

கே: 27.06.2015 இரவு 14.00 மணிக்கு மற்றும் 16.00 மணிக்கு விஷேசம் ஏதுமில்லை என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால்?

ப: 14.00 மணிக்கு விஷேசம் ஏதுமில்லை என்றும் 16.00 மணிக்கு ஒரு CSR 105/2015 என்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கே: 27.06.2015 நடு இரவு 12.00 மணிக்கு மேல் இரவு 02.00 மணிவரை எவரும் நிலையம் ஆஜராகி ஷமீல் பாஷா இறப்பு குறித்து புகார் ஏதும் அளித்ததாக பதிவுகள் ஏதுமில்லை என்றால் ?

ப: சரிதான். பதிவுகள் ஏதுமில்லை.

கே: 28.06.2015 அன்று தாங்ள் நிலையத்திற்கு பணிக்கு வந்த பிறகு ஷமீல் பாஷா இறப்பு குறித்து எத்தனை புகார்கள் நிலையத்திற்கு கொடுக்கப்பட்டது என்பதை தெரிந்துக்கொண்டீர்களா ?

ப: தெரிந்துக்கொள்ளவில்லை.

கே: தங்களது முதல் விசாரணையில் பக்கம் 6ல் கடைசியில் "பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் நான் 16.06.2015, 17.06.2015, 18.06.2015 ஆகிய தேதிகளில் இரவு பாரா பணி பார்த்ததற்குண்டான ஆவண எண் 36 பக்க எண் 65" என குறிப்பிடப்பட்டுள்ளது. அது சரியா, தவறா ?

ப: தவறு. நான் பகல் பாராவில் பணியாற்றிறேன்.

கே: 26.06.2015 இரவு ஆம்பூர் டிஎஸ்பி கணேசன் பள்ளிக்கொண்டா காவல் நிலையம் வந்ததாக பதிவுகள் உள்ளனவா ?

ப: இல்லை.

கே: இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவண எண் 37 பள்ளிக்கொண்டா காவல் நிலைய மாதிரி பதிவேடு (அ.த.சா.ஆ.30) எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரை உள்ளது ?

ப: 15.06.2015 முதல் 02.07.2015 வரை உள்ளது.

கே: அ.த.சா.ஆ.41ல் சிபிசிஐடி டிஎஸ்பி 06.07.2015 கைப்பற்றப்பட்டதாக தாக்கல் செய்துள்ள மகசரில் உள்ள தங்களின் கையொப்பத்தில் (அ.த.சா.ஆ.77) தேதியிடப்பட்டுள்ளதா ?

ப: தேதியிடப்படவில்லை.

கே: அதனால், 06.07.2015 தாங்கள் பணியில் இருந்ததாக இந்த நீதிமன்றத்தில் ஆவணங்கள் ஏதுமில்லை. அதுபோல 06.07.2015 அன்று தாங்கள் கையொப்பமிட்டதாக அ.த.சா.ஆ.77–லும் இல்லை, அதனால் 06.07.2015–க்கு பின்னிட்டு சிபிசிஐடி தங்களிடம் கையொப்பம் வாங்கியிருக்கிறார்கள் என்றால் ?

ப: இல்லை. அன்றைய தேதியில் நான்தான் கையெழுத்து போட்டேன். தேதி போடவில்லை.

கே: 27.06.2015 அன்று இரவு தாங்கள் பணியில் இல்லாததால் முதல் தகவல் அறிக்கை 158/2015 போட்டது குறித்து தங்களுக்கு நேரடியாக

தெரியாது என்றால் ?

ப: தெரியாது. காலையில் பணிக்கு வரும்போது தெரிந்துக்கொண்டேன்.

கே: உங்களை சிபிசிஜடி விசாரித்து எழுதிக்கொண்டார்களா ?

ப: விசாரித்தார்கள். கம்பியூட்டரில் தட்டச்சு செய்துக்கொண்டார்கள். கையெழுத்து பெறவில்லை.

கே: நீங்கள் ஏற்கனவே 02.07.2015 அன்று சிபிசிஜடியிடம் சொன்ன தகவல்கள் அத்தனையும் சிபிசிஜடி சொல்லிக்கொடுத்தது என்றும் தங்களுக்கு பல தகவல்கள் நேரடியாக தெரியாது என்றால் ?

ப: சரிதான். நான் Statement சொன்னேன். சில தகவல்கள் பதிவு செய்யப்படவில்லை.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**மறுவிசாரணை– இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 03.55 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.03.27 17:40:02 +0530